**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**காணொளிகாட்சி விசாரணை (Video Conference)**
**ஆணை நாள்: 04.06.2025**

**முன்னிலை**
**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

…………

**வழக்கு எண். SA 10350/F/2021**

திரு R.ரெங்கராஜ் பாலண்டார் ... மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்/
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்
(கும்பகோணம்) லிமிடெட்,
27, தொடர் வண்டி நிலைய புதிய சாலை,
கும்பகோணம் - 612 001. ... பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.R.ரெங்கராஜ் பாலண்டார் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.R.ராமநாதன், பொதுத் தகவல் அலுவலர் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்பகோணம்) லிமிடெட், 27, தொடர் வண்டி நிலைய புதிய சாலை, கும்பகோணம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 07.05.2021 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், முன்னாள் முதலமைச்சர் பழனிச்சாமி அவர்கள் முதலமைச்சராக பதவியேற்ற நாள் முதல் 30.12.2020 வரை கரூர்

மாவட்டத்திற்குள் இயங்கும் அரசு பேருந்துகளுக்கு சேஸ் வாங்கியது மற்றும் கரூர் நகர பேருந்து நிலையம் முதல் அரவக்குறிச்சி வரை 01.04.2019 முதல் 30.12.2020 வரை கிடைத்த லாபம் பற்றிய தகவல் உள்பட சேஸ் வாங்கியது, சேஸ்களை தரப் பரிசோதனை செய்து தரமாக உள்ளது, தரமாக இல்லை என்று தரப்பரிசோதனை செய்த ஆய்வறிக்கை நகல் தொடர்பான தகவல்களை 8 இனங்களில் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் மற்றும் அரசு சார்புச் செயலாளர், போக்குவரத்து (அ) துறை, தலைமைச் செயலகம், சென்னை 12.05.2021 நாளிட்ட கடிதம் வாயிலாக மனுதாரரின் மனுவினை தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(3)இன் கீழ் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்பகோணம்) லிமிடெட், 27, தொடர் வண்டி நிலைய புதிய சாலை, கும்பகோணம் அவர்களுக்கு மாற்றம் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்பகோணம்) லிமிடெட் அவர்கள் 09.06.2021 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர் 14.06.2021 நாளிட்ட பிரிவு 19(**1)-**ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் 03.08.2021 நாளிட்ட பிரிவு **19(3)**இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கவேண்டுமென்று இவ்வாணையத்தால் 16.12.2021 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அறிவிப்பு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

4. அவ்வாறு, இவ்வாணையத்தால் 31.12.2021 தேதியிட்டு அனுப்பப்பட்ட அறிவிப்பு கடிதத்தை பெற்றுக்கொண்டு பொதுத் தகவல் அலுவலர் நாளதுவரை மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்படாததால், மனுதாராரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரியுள்ள தகவல்களை ஏற்கனவே 23.09.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாகவும், மனுதாரர் அதிகப்படியான தகவல்களை கோரியுள்ளதால், பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்தில் மனுதாரர் பிரிவு 6(1)இன் கீழ் கோரியுள்ள தகவல்களின் கோப்புகளை அலுவலக வேலை நாட்களில் நேரில் பார்வையிட்டு தேவையான தகவல்களை குறிப்பிட்டு கோரும் பட்சத்தில் முழுமையான தகவல்களை வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்கவில்லை எனவும், பொதுத்

தகவல் அலுவலர் உண்மைத் தகவலை வழங்க மறுப்பதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், பொதுத் தகவல் அலுவலர் தான் கோரியுள்ள தகவல்கள் அதிகப்படியான தகவல்கள் என்பதால் நேரில் பார்வையிட்டு முழுமையான தகவல்களை மனுதாரருக்கு வழங்க இவ்வாணையத்தில் அனுமதி கோரியதன் அடிப்படையில், தான் பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு பொதுத் தகவல் அலுவலர் பார்வையிட்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ள கடிதம் அனுப்பும் பட்சத்தில் நேரில் சென்று, தான் பிரிவு 6(1)இன் கீழ் கோரியுள்ள தகவல்களை பார்வையிட்டு பெற்றுக் கொள்வதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

7. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது எனவே, இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் இறுதி வாய்ப்பளித்து, கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

. ***மனுதாரர் 6(1) மனுவில் கோரிய முழுமையான தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 10 தினங்களுக்குள் மனுதாரருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து சட்டப்பிரிவு 2(j)ன்படி பார்வையிட அனுமதி அளித்து பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் அதனை ஒளிநகலெடுத்து, <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன்</u> உரிய சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி வழங்கி, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் பார்வையிட்ட வீடியோ அல்லது புகைப்படத்தையும் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகின்றது.***

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA10350/F/2021</u>**
**<u>பெறுநர்</u>**
பொது தகவல் அலுவலர்/
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்
(கும்பகோணம்) லிமிடெட்,
27, தொடர் வண்டி நிலைய புதிய சாலை,
கும்பகோணம் - 612 001.

**வழக்கு எண். SA10350/F/2021**

**மனுதாரர்**

திரு R.ரெங்கராஜ் பாலண்டார்,
வெங்கங்குடி கள்ளர் தெரு,
பள்ளிவிடை அஞ்சல்,
மணச்சநல்லூர் வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்
621112

Copy to: Judgement File/ Spare.
JE / PA 04.06.2025.